# ஆசிரியர் தேர்வு வாரியம்

3வது தளம், டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு கட்டடம், டி,பி,ஐ, வளாகம், கல்லூரி சாலை, சென்னை–6

ந.க.எண். 3271/E1/S1/2013 நாள் 07.04.2022

பொருள் : ஆசிரியர் தேர்வு வாரியம்–2012–2016 ஆம் ஆண்டு அரசுப் பள்ளிகளில் சிறப்பாசிரியர் (உடற்கல்வி,ஓவியம்,இசை,தையல்) – பணியிடங்களுக்கான நேரடி நியமனம் மூலம் பணித்தெரிவு – சான்றிதழ் சரிபார்த்தலுக்கு அழைத்தல்–சார்பு.

பார்வை : 1. இவ்வாரிய அறிவிக்கை எண்.05/2017, நாள்.26.07.2017.
2. சிறப்பாசிரியர் போட்டி எழுத்துத் தேர்வு நாள் 23.09.2017.

––

1. பார்வை (2)–ல் காணும் தேர்வில் கலந்துகொண்டு பெற்ற மதிப்பெண்கள் மற்றும் இனச்சுழற்சியின் அடிப்படையில் கீழ்க்குறிப்பிட்டுள்ள பணிநாடுநர் சான்றிதழ் சரிபார்த்தலுக்கு அழைக்கப்படுகிறார்.

| | |
|---|---|
| பெயர்: VISALAKSHI. R | |
| எழுத்துத் தேர்வு பதிவெண்: 17ST12020197 | CV No:D03-031 |
| பாடம்: Drawing | Scale of Pay: Rs.5200-20200 + GP – 2800 |
| சான்றிதழ் சரிபார்த்தல் நடைபெறும் நாள்: | **19.04.2022** (செவ்வாய் கிழமை), **9.30 a.m.** |
| சான்றிதழ் சரிபார்த்தல் நடைபெறும் இடம்: | Teachers Recruitment Board, 4th Floor, Dr. M.G.R. Centenary Building, DPI Campus, College Road, Chennai-6. |

2. பணிநாடுநர் சான்றிதழ் சரிபார்த்தலுக்கு வருகைபுரியும்போது இக்குறிப்பாணையைக் கண்டிப்பாக நேரில் சமர்ப்பித்திட வேண்டும். இத்துடன் **இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ள** சுய விவரப் படிவம் (Bio-data form) **(இணைப்பு 1)** மற்றும் ஆளறிச் சான்றிதழ் (Identification Certificate) **(இணைப்பு 2)** ஆகியவற்றைப் பூர்த்தி செய்து சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொள்ள வேண்டும். மேலும், இணைப்பு (3) மற்றும் (4)–ல் உள்ள படிவங்களை முறையே மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஆதரவற்ற விதவைப் பிரிவில் இடஒதுக்கீடு கோருபவர்கள் மட்டும் பூர்த்தி செய்து சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்துகொள்ள வேண்டும். **அனைத்துப் படிவங்களும் அடித்தல் திருத்தல் இன்றி பூர்த்தி செய்யப்படவேண்டும்.**

3. கீழ்க்காணும் அசல் சான்றிதழ்கள் / ஆவணங்களின் இரண்டு ஒளி நகல்களை (Two set of photo copies) அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடம் (Gazetted Officer) சான்றொப்பம் பெற்று சமர்ப்பித்தல் வேண்டும். பார்வை 1–ல் காணும் அறிவிக்கையில் கூறப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட பாடவாரியான (பொதுக்கல்வி / தொழிற்கல்வி) கல்வித் தகுதிகளுக்கான சான்றிதழ்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

i. பள்ளி இறுதிச் சான்றிதழ் / மதிப்பெண் பட்டியல் (SSLC book / Mark sheet)
ii. P.U.C. / மேல்நிலைக் கல்வி (+2) மதிப்பெண் பட்டியல் / பட்டயச்சான்றிதழ் / இணையான கல்வித்தகுதி
iii. இளங்கலைப் பட்டம் மதிப்பெண் பட்டியல்களுடன் (U.G. Degree with Mark sheets)*
iv. பட்டயச் சான்றிதழ் (Diploma Course)*
v. முதுகலைப் பட்டம் மதிப்பெண் பட்டியல்களுடன் (P.G. Degree with Mark sheets)*
vi. தொழில்நுட்ப ஆசிரியர்க்கான சான்றிதழ் (Technical Teachers Certificate) *
vii. இனச்சான்றிதழ் (Community Certificate) உரிய தமிழக அரசு வருவாய் அலுவலரிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும் (திருமணமான பெண் பணிநாடுநர் அவரின் தந்தையின் பெயரில் பெறப்பட்ட இனச்சான்றிதழை மட்டுமே சமர்ப்பித்தல் வேண்டும்).
viii. தமிழ் வழியில் ஒதுக்கீடு (PSTM) கோருபவர் பொதுக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகிய கல்வித் தகுதிகளை தமிழ் வழியில் பயின்றதற்கான சான்றிதழ்களை இணைப்பு (4)–ல் உள்ள படிவத்தில் சார்ந்த கல்வி நிறுவனத்தின் பதிவாளர் / முதல்வர் / தலைவரிடமிருந்து பெற்று சமர்ப்பித்தல் வேண்டும்).
ix. மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ் (Differently Abled) மாவட்ட மருத்துவக்குழுவினால் அளிக்கப்பட்ட சான்றிதழ்.
x. முன்னாள் படைவீரர் (Ex-servicemen) முன்னுரிமை கோருபவர் எனில் முன்னாள் படைவீரர் என்பதற்கான சான்றிதழை உரிய அலுவலரிடம் பெற்று அளித்தல் வேண்டும்.
xi. ஆதரவற்ற விதவை (Destitute Widow) என்பதற்கான சான்றிதழை உரிய வருவாய் கோட்டாட்சியர் (Revenue Divisional Officer) / துணை ஆட்சியர் (Assistant Collector) / சார் ஆட்சியர் (Sub Collector) அலுவலரிடம் இணைப்பு (3)–ல் உள்ள படிவத்தில் பெற்று அளித்தல் வேண்டும்.
xii. வேலைவாய்ப்புப் பதிவு அட்டை (குறியீடு எண்ணுடன்) (நாளது வரை புதுப்பித்திருத்தல் வேண்டும்)
xiii. நன்னடத்தைச் சான்றிதழ் (Conduct Certificate)

அசல் சான்றிதழ்களை ஒரு பகுதியாகவும், இரண்டு ஒளி நகல்கள் மற்றும் படிவங்களை ஒரு பகுதியாகவும் மேற்குறிப்பிட்டுள்ள வரிசையில் சான்றிதழ் சரிபார்த்தலின்போது முன்னிலைப்படுத்துதல் வேண்டும்.

**4. சான்றிதழ் சரிபார்த்தல் நடைபெறும் நாளில் நேரில் சமர்ப்பிக்கப்படும் அசல் சான்றிதழ்கள் ஆவணங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். அத்தேதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்த சான்றிதழ்களும் ஆவணங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.**

**5.** ஆசிரியர் தேர்வு வாரிய நடைமுறை விதிகளின்படி, பணிநாடுநர்கள் சான்றிதழ் சரிபார்த்தலுக்கு அழைக்கப்படுவதும், அதில் அவர்கள் கலந்து கொள்வதும் வேலை வாய்ப்பிற்கு உத்தரவாதமாகாது. குறிப்பிட்ட தேதி / நேரத்தில் சான்றிதழ் சரிபார்த்தலில் கலந்துகொள்ளாத பணிநாடுநர்களுக்கு மீளவும் வாய்ப்பு அளிக்கப்படமாட்டாது. பணிநாடுநரின் தகுதி (eligibility) குறித்து ஆசிரியர் தேர்வு வாரியம் எடுக்கும் முடிவே இறுதியானதாகும்.

**6.** சான்றிதழ் சரிபார்த்தலுக்காக வருகைபுரியும் பணிநாடுநருக்கு இவ்வாரியத்தால் பயணப்படி எதுவும் வழங்கப்படமாட்டாது.

*** அறிவிக்கையில் வெளியிடப்பட்டுள்ள அந்தந்தப்பதவிக் கேற்றார்போல் கல்வித் தகுதிச் சான்றிதழ்.**

**தலைவர்**

பெறுநர்
சார்ந்த பணிநாடுநர்